# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

மலர் : 9 இதழ் :9 ஜுன் : 2025 ரூ.20/-

Volume : 9 Issue : 9 June : 2025 Rs.20/-



# SHRI MAHA MERU MANDALI TRUST

81/1, Mannappa Street, Kottur, Chennai - 600 085.



2014-ம் ஆண்டு முதல் வேதபாரதியின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஸ்ரீ மஹாமேரு மண்டலி குருஜி அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறோம். முதன் முதலில் வேதபாரதி செய்திகள் மாத இதழ் கலரில் வர வேண்டும் என்றும், அதிக பக்கங்களுடன், இதழ் அதிக உறுப்பினர்களுக்கும் சென்றுசேர வேண்டும் என்ற குருஜியின் ஸங்கல்பம் நிறைவேறி 11 ஆண்டுகளாக தொடர்கிறது. வேதபாரதியின் வளர்ச்சிக்கும் சேவைக்கும், ஸ்ரீமஹா மேரு மண்டலி குருஜியின் ஆசீர்வாதங்கள் என்றும் வேண்டும்.

என்றும் பணிவுடன்

வேதபாரதி குழுவினர்

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 70

**அந்யோப்[1]யேவம் யோ வித[3]த்[4]த்மமேவ|**
**- கா[1]ட[2]கோ1பநிஷத். (2.3-18)**

**பொருள்:** *ஒருவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் ஆத்மனை நசிகேதனைப் போல் உணர்த்தும் பிரம்மத்தை அடைந்தவனாகி பாவங்களிலிருந்து விடுதலையாகிறான்.*

*"யார் உணர்ந்தாலும் அவர் முக்தராகி விடுவார்" என்பதுதான் கடோபநிஷத் (காடகோபநிஷத்) சொல்லும் உண்மை.*

*நசிகேதன் யமனிடமிருந்து ஆத்ம தத்துவத்தை உணர்ந்து முக்தனானான். அதைப் போல் யார் வேண்டுமானாலும் முக்தராக முடியும். ஆத்மனை உணர்வதற்கு எல்லோருக்கும் பூர்ண ஸ்வதந்திரம் உண்டு.*

*//ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி://*

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 9 இதழ்: 9

*அச்சிட்டு வெளியிடுபவர்*
*பதிப்பாளர், ஆசிரியர்*

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 *அன்னை இந்திரா நகர்,*
*வேளச்சேரி, சென்னை - 600 042.*
*செல்: 70101 88571*

*அச்சகம்*
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
*39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,*
*சென்னை - 600 010.*

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

*புத்தக வடிவமைப்பு :*
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
*நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,*
*காமராஜபுரம், வேளச்சேரி,*
*செ - 42. போன்: 9025864231*


## புத்தகத்தின் உள்ளே


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| *வருட சந்தா* | *ரூ.200* |
| *10 வருட சந்தா* | *ரூ.1500* |

*வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட*
**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**



*நிர்வாக முகவரி:*
*எண்.31, சேஷாத்திரிபுரம்*
*1வது மெயின் ரோடு, பேபி நகர்,*
*வேளச்சேரி, சென்னை - 600 042.*
**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# பூஜ்யஸ்ரீ நெரூர் ஸ்ரீவித்யா சங்கர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை

## மந்திரங்களின் மகத்துவம்

*சென்றமாத தொடர்ச்சி...*

*சுவாமியே சரணம் ஐயப்பா*

*மந்த்ரங்களுடைய மஹாத்ம்யம் என்கிற விஷயத்தில் வேதம் பல விஷயங்களை பற்றி சொல்கிறது.*

*வேதத்தின் மஹிமை என்னவென்றால் அதில் கதை பாகங்கள் உள்ளது. ஸ்ருஷ்டி எவ்வாறு ஏற்பட்டது என்றும், ஒரு மனுஷ்யன் அத்யாவஸ்யமாக எதை அனுஷ்டிக்க வேண்டும் எதை அனுஷ்டிக்க கூடாது என்று தர்ம விஷயங்களும், மற்றும் பகவானுடைய விசேஷ அம்சங்கள் பற்றியும் அதில் உள்ளது. வேத மந்த்ரங்கள் அனைத்தும் மஹிமை வாய்ந்தது தான், குறிப்பாக சூர்ய நமஸ்காரம், ஸ்ரீருத்ரம, சமகம்,புருஷ சூக்தம் – இதையெல்லாம் பல ஆவர்த்தி ஜபிப்பதற்கு ரிஷிகள் முறைஅமைத்து கொடுத்துள்ளார்கள்.*

*உதாஹரணத்திற்கு ஸ்ரீருத்ரத்தை எடுத்து ருத்ர ஏகாதசினி, மஹா ருத்ரம், அதி ருத்ரம் என்றெல்லாம் செய்வதற்கு ஒரு நியமத்தை அமைத்து கொடுத்துள்ளார்கள். புருஷ சூக்தத்தை எந்த பயனிற்கு எத்தனை ஆவர்த்தி ஜபம் செய்ய வேண்டும் என்று கூறி உள்ளார்கள். குழந்தை பிறப்பதில் தாமதம் ஏற்பட்டால் சந்தானகோபால விதி என்று ஒன்று ஏற்படுத்தி, அதில் புருஷசூக்தத்தை ரிக்வேத ப்ரகாரம் ஜபம் செய்து, அதற்கு ஏற்படுத்தி, அதில் புருஷசூக்தத்தை ரிக்வேத ப்ரகாரம் ஜபம் செய்து, அதற்கு எவ்வாறு ஹோமம் செய்ய வேண்டும், எப்படி பகவானை பூஜித்தால்,*

தோஷங்கள் நீங்கி நன்மை உண்டாகும் என்ற க்ரமங்களெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது. சூர்ய நமஸ்காரத்தை, ஆரோக்கியத்திற்காக நமஸ்காரத்துடன் எவ்வாறு பூஜை செய்ய வேண்டும் என்றெல்லாம் அதில் உள்ளது. வேதம் மந்த்ரங்களுடைய தொகுப்பு – கதம்பம். அதில் பல விசேஷ அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நம் பெரியவர்கள், ரிஷிகள் எல்லாம், ஸந்த்யாவந்தனத்திலேயே பல அர்த்தம் பொதிந்த மந்த்ரங்களை வைத்துள்ளார்கள். "ஆபோஹிஷ்டா மயோ புவ:" என்ற ஒரேயொரு மந்த்ரத்திற்கே நிறைய பக்கங்கள் அர்த்தம் எழுதி உள்ளார்கள் நம் பெரியவர்கள்.

ஒரு சின்ன உதாஹரணம் – "யாஜுஷ மந்த்ர ரத்னாகரம்'' என்று ஒரு க்ரந்தம், யஜுர்வேத மந்திரங்களின் தொகுப்பாக இருக்கிறது. அதில் உதக ஷாந்தி, அகமர்ஷண சூக்தம் (காலை ஸ்நானத்தின் பொழுது சொல்ல வேண்டிய மந்த்ரம் – அகம் என்றால் அழுக்கு கூட்டங்கள், மர்ஷணம் என்றால் அதை போக்குவது என்று பொருள்), வைஸ்வதேவ மந்த்ரங்கள், சிவபூஜை மந்த்ரங்கள், வஸ்த்ரதாரணத்திற்கு மந்த்ரம் என்றெல்லாம் பல மந்த்ரங்கள் இருக்கின்றன. அதில் கடைசியில் "காம்ய ஜப்ய மந்த்ரா:" என்று ஒரு பாகம் உள்ளது. சௌனகாதி மஹரிஷிகள் புராணங்களில் இந்த ரிக்குகள் (ரிக் வேத மந்திரங்கள்) எந்த காரியத்திற்காக ஜபிக்க வேண்டும், எத்தனை ஆவர்த்தி ஜபிக்க வேண்டும் என்று வேத மந்த்ரங்களுக்கே பலஸ்ருதி எழுதி வைத்திருக்கிறார்கள்.

விசேஷமாக ரிக் வேதத்தில் "பவமான சூக்தம்'' என்று அபம்ருதியுவை போக்க கூடிய, பஞ்ச மஹா பாதகங்களை போக்க கூடிய ஒரு மந்த்ர பாகம் உள்ளது.

மஹா சௌரம் என்று ஒரு பாகம் உள்ளது, அது பலவித ரோகங்களை போக்க கூடியது.

துஸ்வப்ன நிவர்த்திக்கு ஒரு மந்த்ரம் உள்ளது. நாமெல்லாம் எதற்கு என்று தெரியாமல், ஒரு விஷயத்தை நித்யம் செய்து கொண்டிருக்கிறோம். என்னவென்றால், ஸந்த்யாவந்தனத்தின் கடைசியில் எழுந்து நின்று தீர்த்தம் விடும் பொது "அத்யா நோ தேவ ஸவித: ...பரா துஷ்வப்னியகும் ஸுவ/ ...யத் பத்ரம் தன்ம ஆஸுவ/ "என்று சொல்லி தீர்த்தத்தை எடுத்து நெற்றியில் இட்டுக்கொள்ள வேண்டும். துஸ்வப்னம் வராமல் இருக்க வேண்டும் என்று இந்த மந்த்ரத்தில் பலன் உள்ளது. நம்மேல் உள்ள கருணையால் மஹரிஷிகள், வேதங்களில் உள்ள எந்தெந்த மந்த்ரங்கள் எதற்காக மற்றும் எத்தனை ஆவர்த்தி ஜபித்தால் என்ன பலன் கிடைக்கும் என்று நமக்கு சொல்லி இருக்கிறார்கள்.

தொடரும்...

உ

**கோடி காயத்ரீ ஜப யக்ஞம்**

நாள் : 29.06.2025, ஞாயிற்றுக்கிழமை

இடம் :

**ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி கோவில்**

**கோகுல் நகர், ஓசூர்**

**அன்புடன் அழைக்கும்**

வேதபாரதி, ஓசூர்

**ஸ்ரீ வைத்யநாதன்** **95903 35251**

**ஸ்ரீ பாபு சர்மா** **94436 34283**

## உங்கள் சிந்தனைக்கு....

# 21. விதி

**நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை அற்றே**
**பதியின் பிழை அன்று, பயந்து நமைப் புரத்தாள்**
**மதியின் பிழை அன்று, மகன் பிழை அன்று மைந்த!**
**விதியின் பிழை! நீ இதற்கு என்னை வெகுண்டது?**

**இந்த பாடல் கம்ப ராமாயணத்தில் வருகிறது. கம்பர் மிக அழகாக உணர்ச்சியுடன் இந்த பாடலை பாடியிருக்கிறார்.**

*இந்த பாடலின் சூழல் என்னவென்றால், இராமாயணத்தில் கைகேயி சூழ்ச்சி செய்து தசரதனிடம் ஒரு வரத்தைப் பெற்றாள். அதன்படி ராமன் 14 ஆண்டுகள் வனத்திற்குச் செல்லவேண்டும். தன் மகன் பரதன் இந்த நாட்டின் அரசனாக வேண்டும். தசரதனும் இதை தெரிவிக்கிறான். ராமனும் தன் தந்தை சொல்லை மதித்து காட்டிற்குச் செல்ல ஆயத்தமாகிறான். இந்த சூழ்நிலையைக் கண்ட லட்சுமணன் தன் அண்ணனுக்கு ஏற்பட்டதை நினைத்து கைகேயியைத் தாக்குவதற்கு பாய்கிறான். அந்த நேரத்தில் தான் இராமன் இந்த பாடலை பாடுவதாக கம்பர் எழுதியிருக்கிறார்.*

*இந்த பாடலின் பொருள் = (இராமன் லட்சுமணனிடம் சொல்லுகிறான்)*

*“லட்சுமணா, ஏன் கோபம் கொள்கிறாய்? நதி ஒன்று நீர் இல்லாமல் வறண்டுபோய், அழகற்று இருந்தால் அது அந்த நதியின் குற்றமா? இல்லையே. மழை பெய்யாமல் போனதற்கு நதி மீது நாம் பிழை சொல்லலாமா? அதுபோல தான் இதுவும். கைகேயி மீது குற்றம் கிடையாது. முடிசூடப்போகும் தம்பி பரதன் மீதும் குற்றம் கிடையாது. வரம் கொடுத்து என்னை*

*வனத்திற்கு போகச் சொன்ன தந்தை மீதும் குற்றம் கிடையாது. இது* **விதியின்** *பிழை. விதி இப்படி அமைந்துவிட்டது. இதற்கு பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? இதற்காகவா நீ சினம் கொள்கிறாய்? வேண்டாம்.*

*மற்றவர்கள் செய்யும் தவறுகளை மன்னித்து, அவர்களை அன்புடன் நடத்த வேண்டும் என்பதை கம்பர் எத்தனை அழகாக கூறியுள்ளார்.*

**D. சூரியநாராயணன்**

## வேதவகுப்பு

வேதவகுப்புகள் சேர்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

94451 02193 / 9994926537 / 98402 01625

வார இறுதி நாட்கள் யஜுர் வேத வகுப்பு ஆரம்பமாகி உள்ளது. இணைந்து பயன்பெற வேண்டுகிறோம்.



||Shri Chowdeshwari Prasanna||

**SHREE SHANKARA THAPOVANAM**

**(Shree Chandramouleswara Seva & Trust)**

Plot No.596, VGP Jayanagar, Onnalavadi, Thorapalli Panchayat, Rayakotta Road, HOSUR – 635126.

**MONTHLY SEVA**

1. Pradosha Pooja
2. Shukla Panchami Pooja
3. Ashlesha Abhishekam
4. Sankasthahara Chatrurthi
5. Go Pooja on Fridays

**GAU POSHANA SEVA**

1 Cow feeding for day rs.145/-
10 cows for day Rs.1,450/-
1 Cow for month Rs.4350/-
10 Cows for month Rs.43,500/-



**Life Time One day Pooja for Every year (Life Membership) Rs.5001/-**



***Devotees are requesting to contribute for Gou Seva***

**For Online Payments**

A/c Shree Chandramouleswara Seva & Trust, Inidan Bank,
A/c No.6189034010 IFSC Code : IDIB000B142
Branch : Hosur

# அட்டைப்பட விளக்கம்

# வைகாசி விசாகம்

**“வைகாசி விசாகம்”** என்பது முருகப்பெருமான் அவதரித்த நாளாகும். வைகாசி மாதத்தில் வரும் பதினாறாவது நட்சத்திரமாகிய “விசாகத்தில்தான் முருகன் அவதரித்தார்’. முருகனுக்கு **“விசாகன்”** என்று ஒரு பெயர் உண்டு. **“வி”** என்றால் **“பறவை”** (அதாவது மயில்), **“சாகன்”** என்றால் பயணம். முருகன் மயில் மீது பயணம் செய்யும் காரணம் இதுதான்.

சிவபெருமானின் ஐந்து முகங்களான **ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேயம், சத்யோஜாதம்** ஆகியவற்றுடன் **“அதோமுகம்”** என்கிற ஆறாவது முகமும் வெளிப்பட இந்த ஆறு முகங்களின் நெற்றிக் கண்களில் இருந்து வெளிப்பட்ட அக்னிப் பிழம்பில் அவதரித்தவர் முருகப்பெருமான். ஆறு கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவர். நல்ல வைகாசி வெயிலில் பிறந்த காரணத்தால் “உஷ்ணாவதாரம்” என்று கூறப்படுகிறது.

வைகாசி விசாக நக்ஷத்திரத்தன்று பகல் முழுவதும் விரதம் இருந்து ஸ்ரீ கந்தசஷ்டி கவசம், ஸுப்ரமண்ய புஜங்கம் போன்றஸ்தோத்தரங்களை பாராயணம் செய்து மாலையில் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு முருகனின் பிரசாதத்தை உண்டு விரதத்தை முடிக்க வேண்டும்.

இந்த வருடம் **“வைகாசி விசாகம்” 09.06.2025 திங்கட்கிழமை** வருகிறது. அந்த நாளில் முருகப்பெருமானின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடி மகிழ்வோம்.

**D. சூரியநாராயணன்**

## விசுவாவசு வருஷம் - ஆனி மாத விசேஷங்கள்

**(ஜுன் 16.06.2025 முதல் ஜுலை 15.07.2025 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *17.06.2025* | ஆனி *3* | செவ்வாய் | ஷஷ்டி |
| *21.06.2025* | ஆனி *7* | சனி | ஏகாதசி |
| *25.06.2025* | ஆனி *11* | புதன் | அமாவாசை |
| *27.06.2025* | ஆனி *13* | வெள்ளி | வடலூர் வள்ளலார் பூசம் |
| *29.06.2025* | ஆனி *15* | ஞாயிறு | சதுர்த்தி |
| *01.07.2025* | ஆனி *17* | செவ்வாய் | ஷஷ்டி |
| *06.07.2025* | ஆனி *22* | ஞாயிறு | ஏகாதசி |
| *07.07.2025* | ஆனி *23* | திங்கள் | அனுஷம் சாதுர்மாஸ்ய ஆரம்பம் |
| *08.07.2025* | ஆனி *24* | செவ்வாய் | ப்ரதோஷம் |
| *10.07.2025* | ஆன் *26* | வியாழன் | பௌர்ணமி, குருபூர்ணிமா, மாங்கனி திருவிழா |
| *14.07.2025* | ஆனி *30* | திங்கள் | சதுர்த்தி |
| *16.07.2025* | ஆனி *32* | புதன் | ஷஷ்டி |

### 25.06.2025 புதன்கிழமை அமாவாசை

விசுவாவசு நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே கிரீஷ்ம ருதௌ, மிதுன மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து ஸௌம்ய வாஸர யுக்தாயாம் ம்ருஹசிரோ நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம் குண ஸகல விஸேஷேண வஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 73

**ஏகாத்யாயம் து யோ நித்யம் படதே பக்த ஸம்யுத:/**
**ருத்ரலோக மவாப்னோதி கணோ பூத்வா வஸேச்சிரம்//**

*கீதையை பக்தியுடன் ஓர் அத்தியாயமாவது நித்தியம் படிப்பவன் ருத்திரலோகத்தையடைந்து அவனுடைய கணங்களில் ஒருவனாக அங்கு நெடிது வாழ்கிறான்.*

## அத்தியாயம் மூன்று
## கர்ம யோகம்...

**இந்த்3ரியஸ்யேந்த்3ரியஸ்யார்த்தே ராகத்3வேஷௌ வ்யவஸ்திதௌ/**
**தயோர்ந வசமாகச்சேத் தௌ ஹ்யஸ்ய பரிபந்தி2னௌ//**

*(கீதை 3-34)*

**பொருள் : இந்திரியங்களுக்கு விஷயங்களில் விருப்பு வெறுப்பு உண்டு அவைகளுக்கு வசப்படலாகாது. அவைகளே அவனுக்கு சத்ருக்கள்.**

**விளக்கம் :** *நம் எல்லோருக்கும் பலவிதமான விருப்பு வெறுப்புகள் உண்டு. நாம் சாப்பிடும் ஆகாரத்தில் நமக்கு தோசை பிடிக்கும், உப்புமா பிடிக்காது என்று வேறுபாடு உண்டு. நம்முடன் பழகுகிறவர்களிடம் விருப்பு வெறுப்பு உண்டு. மனிதர்கள் இல்லாமல் பறவைகள் மிருகங்களுக்கும் இந்த குணம் உண்டு. நாம் காகத்திற்கு சாதம் வைத்தால் அதை உண்ண வரும் காகங்கள் மற்ற பறவைகளை அண்டவிடாது. நாய்கள் மற்ற நாய்களை அண்டவிடாது. அதனால் நமக்குள் அப்படி விருப்பு வெறுப்பு இருந்தாலும் அது நம் உள்ளே பிரவேசிக்க நாம் இஷ்டமுள்ளதில் மட்டும் Attachment வைத்துக்கொண்டு இஷ்டமில்லாததில் மனதிற்கு இடம் கொடுக்கக்கூடாது. இந்த விருப்பு வெறுப்புதான் மனிதனின் பரம எதிரிகள் பகைவர்கள்.*

**ச்ரேயான் ஸ்வதர்4மோ விகு3ண: பரத4ர்மாத் ஸ்வனுஷ்டி2தாத்/**

**ஸ்வத4ர்மே நித4னம் ஸ்ரேய : பரத4ர்மோ ப4யாவஹ://**

*(கீதை 3-35)*

**பொருள் :** *நன்கு கடைபிடிக்கப்பட்ட பிறருடைய தர்மத்தைக் காட்டிலும் குணக்குறைவிருப்பினும் தன்னுடைய தர்மம் மிகவும் உயர்ந்தது. ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிப்பதில் இறப்பதும் மேன்மையே தரும். பிறருடைய தர்மம் பயத்தை விளைவிக்கும்.*

**விளக்கம் :** *இந்த ஸ்லோகத்தின் முதல் வரி அப்படியே மீண்டும் 18ம் அத்தியாயத்தில் 47ஆவது ஸ்லோகத்தில் வருகிறது. அதனால் இந்த ஸ்லோகம் மிகவும் முக்கியமானது.*

*இந்த ஸ்லோகத்தில் பகவான் அர்ஜுனனிடம், "அர்ஜுனா நீ இப்போது செய்யவேண்டிய முக்கிய கடமை என்பது தர்மத்தின்படி யுத்தம் செய்யவேண்டியது. ஆனால் அந்த கடமையை நீ மறந்து யுத்தத்திலிருந்து விலகினால் நாளை அது உன்னை குற்ற உணர்வு, துக்கம், பயம் ஆகியவற்றால் உன்னை தளர்த்தும், ஆகையால் நீ உன் கடமையிலிருந்து நழுவாதே" என்கிறார்.*

*மற்றவர்களுடைய வேலையை நாம் நன்றாக செய்வதைவிட நம்முடைய செயல்களை குறைபாடுடன் செய்தாலும் அது மேன்மையானது. ஒருவனுக்கு விதிக்கப்பட்ட கடமைகள்தான்* **"ஸவதர்மம்"** *என்பது தன்னுடைய தர்மத்தைச் செய்வது.*

*அதாவது நாம் செய்ய வேண்டியதை சரியாக செய்யவில்லை என்ற குற்ற உணர்வு வரும். அதனால் நமக்கென்று ஏற்படுத்தப்பட்ட தர்மத்தில் சிறந்து விளங்குவதே சரியானது. மற்றவர்கள் தர்மத்தை அனுஷ்டித்து ஆபத்தை அடைவதைவிட நம் தர்மங்களை அனுஷ்டித்து இறப்பதே மேல்.*

தொடரும்.....

# வாழ்க்கை தத்துவங்கள் (படித்ததும், கேட்டதும்)

## (1)

வாழ்க்கை வாழ்ந்ததற்கான அர்த்தம் இருக்க வேண்டுமானால், வாழ்வதும் வாழ விடுவதும் நமது வாழ்க்கைத் தத்துவங்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீமத் பகவத் கீதையும், ஸ்ரீமத் பாகவதமும் நமக்கு எத்தனையோ வாழ்க்கைத் தத்துவங்களை போதித்துள்ளன. அவற்றைநாம் கடைபிடித்தால் நம் வாழ்க்கை செம்மையாக அமையும்.

1. நமது கண்கள் சரியாக இருந்தால் இந்த உலகத்தை நமக்கு பிடிக்கும். நமது நாக்கு சரியாக இருந்தால் இந்த உலகத்திற்கே நம்மை பிடிக்கும்.
2. தென்றல் போல இருப்பவர்களை புயலாக மாற்றுவது சிலரின் தகாத வார்த்தைகளே.
3. சிலருக்கு நம்மை பிடிக்காது போவதற்குக் காரணம் நம் குணம் சரி இல்லை என்பது அல்ல. அவர்கள் குணத்திற்கு ஏற்றார்போல நாம் இல்லை என்பதே.
4. மனம் விட்டு பேசிவிட்டால் தீராத பிரச்சனைகள் இல்லை. ஆனால் யார் முதலில் பேசுவது என்றஆணவத்திலே இங்கு சில உறவுகள் பிரிந்து விடுகிறது.
5. ஒரு நல்ல மனிதரை எப்போதும் மோசமாக நடத்திவிடாதீர்கள். ஏனெனில் ஒரு அழகான கண்ணாடி உடைந்து தான் மிக கூர்மையான ஆயும் உருவாகிறது.

**சூரியன்.**

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 51

## ஸ்கந்தம் — 5

## “அஜாமிளன்” சரித்திரம்

யமதூதர்கள் விஷ்ணு தூதர்களைப் பார்த்து “இதுவரை இவன் செய்த பாவங்களுக்கு ப்ராயசித்தம் செய்து கொள்ளவில்லை. இவன் தண்டனைக்குரியவன் ஆகவே நாங்கள் இவன் உயிரை எடுத்துச்செல்ல வேண்டும்” என்றார்கள்.

அதைக்கேட்ட விஷ்ணுதூதர்கள் “இவன் எவ்வளவு பாபங்கள் செய்தால்தான் என்ன? கோடி ஜென்ம பாவங்களுக்கும் ப்ராயசித்தம் செய்வதுபோல் **“நாராயணா”** என்ற நான்கெழுத்துக்களைக் கூறி அனைத்துப் பாவங்களுக்கும் பரிஹாரம் தேடிக்கொண்டுவிட்டான்”.

அவர்கள் மேலும் தொடர்ந்தார்கள் “திருடன், குருடன், நம்பியவர்களுக்கு துரோகம் செய்தவன், அந்தணனைக் கொன்றவன் அரசன், பெற்றோர், பசு ஆகியவரைக் கொலை செய்தவன். இன்னும் பல கொடூர பாவங்களைச் செய்தாலும் அத்தனையையும் விட உயர்ந்த ப்ராயசித்தம் பகவான் நாமமே. ஒருவன் பாவமே செய்வேன் என்று சங்கல்பம் செய்துகொண்டு ஜென்மா முழுவதும் பாவங்கள் செய்தாலும், அவனால் ஒரே ஒரு முறை பகவான் நாமத்தைக் கூறினால் போதும். இவன் பாவங்கள் அனைத்தும் இப்போது பொசுங்கிவிட்டன. இவனை அழைத்துச் செல்ல வேண்டாம், விட்டுவிடுங்கள். இவன் மரண தண்டனைக்குரியவன் அல்ல” என்றார்கள்.

இதைக்கேட்ட யமதூதர்கள் திரும்பிச் சென்று யமதர்மராஜாவிடம் நடந்ததைக் கூறினார்கள்.

ஜீவனைக் கொண்டுவராமல் வெறும் கையோடு வந்த தூதர்களைப் பார்த்து “எங்கே ஜீவன்?” என்றார்.

அதற்கு யம தூதர்கள் “மஹாராஜா அவன் தன் மகனை “நாராயணா” என்று அழைத்தவுடன் நான்கு விஷ்ணு தூதர்கள் வந்து அவன் ஜீவனை எடுக்கக்கூடாது என்று எங்களைத் தடுத்துவிட்டார்கள்” என்றார்கள்.

இதைக்கேட்டதும் யமதர்மராஜா தூதர்களே! **நீங்கள் நல்ல காரியம் செய்தீர்கள். எனக்கும் மேல் இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு அதிகாரி இருக்கிறார். நான் உட்பட அனைத்து தேவர்களும் அந்த பகவானின் மாயைக்கு ஆட்பட்டவர்களே.**

ஸ்ரீமன் நாராயணனை வணங்குபவர்களுக்கும், அவருடைய திருநாமத்தை உச்சரிப்பவர்களுக்கும் இந்த யமலோகத்தில் இடமில்லை” என்றான்.

அஜாமிளன் தன்முன்னால் நடந்ததை பார்த்துக்கொண்டே படுத்திருந்தான். அவனுக்கு வைராக்யம் வந்தது. அவன் ஹரித்துவாரத்திற்கு போய் பகவானை மனதால் தியானம் பண்ணி இந்திரியங்களை அடக்கி **“ஸர்வம் வாசுதேவம்”** என்று கூறி முக்தி அடைந்தான்.

இத்துடன் அஜாமிளன் சரித்திரம் முடிந்தது.

ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...

99940 89133 99940 89140



**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Varieties on Order*



28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **பகுதி 43**

## அத்தியாயம் 17
## (பத்மபாதரின் யாத்திரை)

தோடகாசார்யாருக்கு ஸந்யாஸம் கொடுத்த பிறகு ஸ்ரீ சங்கரர் தன் சிஷ்யர்களுடன் வேதாந்த விசாரத்தில் மூழ்கி வந்தார். ஒரு நாள் ஸ்ரீசங்கரர் ஸுரேச்வராசார்யரை அழைத்து “நாம் எழுதிய ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்திற்கு நீங்களே ஒரு “வார்த்திகரசனை” செய்ய வேண்டும். வார்த்திகம் இல்லாமல் பாஷ்யத்தின் குண தோஷங்களை நன்றாக புரிந்துகொள்ள இயலாது” என்று கூறினார். (வார்த்திகம் என்றால் ஒரு நூலில் காணப்படும் குணங்களை மட்டுமின்றி தோஷங்களையும் சுட்டிக்காட்ட வேண்டும். இதுவே வார்த்திகம்)

**இதைக்கேட்ட ஸுரேஸ்வரர் “தங்கள் ஆணையிட்டால் நான் அவ்வாறே செய்கிறேன்” என்று கூறிவிட்டு ஸ்ரீசங்கரரை வணங்கினார்.**

ஆனால் இந்த முடிவில் பத்மபாதருக்கு சிறிய ஐயமிருந்தது. தான் ஏன் இந்த வார்த்திகரசனை செய்யக்கூடாது என்று, ஸ்ரீ சங்கரர் பத்மபாதரை அழைத்து “நீங்கள் இப்படி நினைக்கிறீரா? என்றார். பத்மபாதரும் அதை ஒப்புக்கொண்டார், “இப்போது தாங்கள் வார்த்திகரசனை செய்யவேண்டாம், தாங்கள் ஒரு வேதாந்தநூலை இயற்றுங்கள்” என்று கூறிவிட்டார்.

ஒரு நாள் பத்மபாதர் ஸ்ரீசங்கரரிடம் வந்து “பகவான் நான் ராமேஸ்வரம் வரை ஒரு தீர்த்தயாத்திரை செல்ல எனக்கு அனுமதி அளிக்க

வேண்டும்” என்றார். பலநாட்கள் கோரிக்கைக்கு பிறகு ஸ்ரீசங்கரர் விஷ்ணுவரதனையும் கூட அழைத்துச் செல்லும்படி கூறினார். ஆச்சாரியரின் அனுமதி கிடைத்ததும் பத்மபாதர் விஷ்ணுவரதனுடன் தீர்த்தயாத்திரை புறப்பட்டார்.

பல தீர்த்தக்ஷேத்திரங்களை தரிசனம் செய்துகொண்டு பத்மபாதர் வாயு க்ஷேத்திரமான காளஹஸ்தியை அடைந்தார். வேடுவ குலத்தைச் சேர்ந்த கண்ணப்ப நாயனார் பூஜித்து பகவத் தரிசனத்தை அடைந்த சிவலிங்கம், இங்கு உள்ளது. அதை தரிசனம் செய்த பத்மபாதர் ஸ்ரீசங்கரர் இயற்றிய சிவானந்தலஹரியை பாராயணம் செய்தார்.

காளஹஸ்தியிலிருந்து புறப்பட்டு முக்திபுரியான காஞ்சிபுரத்தை வந்தடைந்தார். அங்கு ஏகாம்பரநாதரையும், காமாக்ஷி அம்மனையும் பின்னர் வரதராஜரையும் தரிசித்துவிட்டு காவேரி தீரம் வழியே நடந்து ஸ்ரீரங்கம் அடைந்தார். அங்கு ஸ்ரீரங்கநாதரை வணங்கி வழிபட்டார். பின் அதன் அருகில் இருக்கும் ஜம்புகேச்வரத்தில் பெருமானையும் அகிலாண்டேச்வரியையும் தரிசனம் செய்துவிட்டு ராமேஸ்வரம் புறப்பட்டார்.

வழியில் திருவானைக்காவலில் தன் பூர்வாசிரமத் தாய்மாமனைச் சந்தித்து அவர் வீட்டில் தங்கினார். அப்போது தன் தாய் மாமனுக்கு தான் எழுதிய வார்த்திகத்தைப் படித்து காட்டினார். அதில் கர்ம மார்க்கம் கண்டிக்கப்பட்டிருப்பதை அந்த தாய்மாமன் விரும்பவில்லை. அதனால் பத்மபாதரிடம் “உனது வார்த்திகத்தை நான் ஆழ்ந்து படிக்க விரும்புகிறேன். இதை என்னிடம் கொடுத்துவிட்டு போ, யாத்திரை முடிந்து வரும்போது நூலை திரும்ப பெற்றுக்கொள்” என்றார். பத்மபாதரும் அவ்வாறே செய்தார். ஆனால்

அவர் திரும்பி வந்தபோது அவரது தாய்மாமன் வீட்டைக் காணவில்லை. அவரது தாய்மாமன் "என் வீடு எப்படியோ நெருப்பு பற்றி எரிந்துவிட்டது. அதில் தாங்கள் கொடுத்த வார்த்திகமும் எரிந்துசாம்பலாகி விட்டது என்று பொய் கூறினார். தன் தாய் மாமனின் துர்புத்தியை அறிந்துகொண்ட பத்மபாதர் "நீங்கள் வருத்தப்பட வேண்டாம். அந்த நூலை மீண்டும் எழுதுவது எனக்கு எளிதே" என்று கூறினார்.

பிறகு அங்கிருந்து நடந்தே தர்பாசயனத்தை அடைந்தார். ஒரு காலத்தில் புல்லமுனி தவம் புரிந்த ஆஸ்ரமம் அங்குதான் இருந்தது. அதனால்தான் அந்த இடத்திற்கு "திருப்புல்லானி" என்று தமிழில் பெயர் வந்தது. அங்கு தரிசனத்தை முடித்துக்கொண்டு பத்மபாதர் ராமேஸ்வரத்தை அடைந்தார். அங்கு ராமநாதரை தரிசித்து ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியால் பிரதிஷ்டை செய்த லிங்கத்தை பூஜை செய்து சில நாட்கள் அங்கு தங்கியிருந்து கடுமையான தவமிருந்தார்.

பத்மபாதரும் அவர் சிஷ்யரும் ஆச்சார்யரை காண்பதற்கு ச்ருங்கேரியை வந்தடைந்தார்கள்.

பத்மபாதர் தன் ஆச்சாரியர் ஸ்ரீசங்கரரின் நிழல்போல் எப்பொழுதும் பின்தொடர்ந்து இருந்துவிட்டு இத்தனை நாட்கள் அவரை விட்டுப்பிரிந்து இருந்தது இதுவே முதல் முறை.

ஆனால் ஸ்ரீசங்கரர் தன் சிஷ்யரின் பிரிவின் போது எந்தவித சலனமும் இன்றி அஸமான்யமான அஸங்கநிலையில் இருப்பதைக் கண்டு "ஒரு ப்ரஹ்மஞானியின் பற்றுதலற்றதன்மையை சிஷ்யர்கள் புரிந்து கொண்டார்கள்.

யாத்திரை தொடரும்...

# ஔவையார்

*(பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டது)*

*ஸ்ரீ மஹாபெரியவா, தெய்வத்தின் குரலில் ஔவையாரைப் பற்றி கூறியது சென்றமாதத்தின் தொடர்ச்சி...*

*"ஔவையாருக்கு இத்தனை வாக்கு சக்தி எங்கிருந்து வந்தது? வாக்கு சக்தி மட்டுமில்லை அவளுக்கு ரொம்பவும் தேக சக்தியும் இருந்தது. அதனால்தான் "ஐயோ தமிழ்க் குழந்தை ஒன்றுக்குக்கூட நம் வாக்குக் கிடைக்காமல் போகக்கூடாதே! ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் இந்த உபதேசங்களைக் கொடுக்க வேண்டுமே! என்று பரிவோடு அந்தப் பாட்டி ஒரு கிராமம் மிச்சம் இல்லாமல் ஓடி ஓடி போய், குழந்தைகளைத் தேடித் தேடி அவர்களுக்கு தன் நூல்களைப் பரிந்து பரிந்து போதித்தாள்...*

*ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் இந்த உபதேசங்களைக் கொடுக்க வேண்டுமே! என்று நினைத்த ஔவை பாட்டி, ஒரு கிராமம் மிச்சம் இல்லாமல் ஓடி ஓடி போய், குழந்தைகளைத் தேடித் தேடி அவர்களுக்கு தன் நூல்களைப் பரிந்து பரிந்து போதித்தாள் அல்லவா? அவள் மறைந்து எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்டன. ஔவை பாட்டி நினைத்ததை நிறைவேற்றவேண்டும் அவரை போற்றவேண்டும் என்ற நோக்கத்துடன்* **"வேதபாரதி அமைப்பு" 2016** *முதல் தொடர்ந்து வருடாவருடம், எல்லா பள்ளிகளிலிருந்தும் குழந்தைகளை வரவழைத்து தாம்பரம் ஸ்ரீசங்கர வித்யாலயா பள்ளியில்* **"ஔவை விழா"** *என்ற தலைப்பில் ஔவையாருக்கு விழா எடுத்தது.*

*அதன் விவரங்கள் வாசகர்களுக்காக இங்கு.......*

## 2016

*கடந்த 28.08.2016 ஞாயிறு அன்று, வேதபாரதியும் ஸ்ரீசங்கரா எஜுகேஷனல் டிரஸ்டும் இணைந்து நடத்திய 2016-ம் ஆண்டுக்கான* **“ஔவை விழா”** *கிழக்கு தாம்பரம் ஸ்ரீ சங்கரா வித்யாலயா உயர் நிலைப் பள்ளியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, உள்ளகரம், பம்மல், நங்கநல்லூர், தாம்பரம் மேற்கு, தாம்பரம் கிழக்கு, முடிச்சூர், ஊரப்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள பள்ளிகளை அணுகி அவர்கள் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளை* **“ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, விநாயகர் அகவல்** *ஆகிய பாடல்களில் மனப்பாடப்போட்டி மற்றும்* **“ஔவை கண்ட அன்னையும் பிதாவும்’, “ஔவையும் கல்வியும்’, “நான் தெரிந்து கொண்ட ஔவை”** *ஆகிய தலைப்புகளில் கட்டுரைப்போட்டி ஆகியவற்றில் பங்குபெற மாணவ மாணவிகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அதன்படி 30 பள்ளிகளிலிருந்து மொத்தம் 336 மாணவ மாணவிகள் ஒப்புவித்தல் போட்டிகளிலும் 103 மாணவ மாணவிகள் கட்டுரைப் போட்டியிலும் கலந்துகொண்டார்கள். காலை 8.30 முதல் பகல் 12.00 வரையிலும் ஒப்புவித்தல் போட்டிகள் நடைபெற்றன.*

*போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழா பகல் 12.30 மணிக்கு ஆரம்பமானது. விழாவில் எழுத்தாளரும், வர்ணனையாளரும், மூத்த ஊடகவியலாளருமாகிய ஸ்ரீ பி.சுதாங்கன் தலைமை வகிக்க, மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி ஸாஸ்திரிகள் மற்றும் ஸ்ரீ வேப்பத்தூர் கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு*

அழைப்பாளர்களாக கலந்துகொண்டார்கள். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு மற்றும் ஆறுதல் பரிசு என்று நான்கு வகையான பரிசுகள் வழங்கப்பட்டன. வேதபாரதியின் செயலர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று உரையாற்றினார்.

ஸ்ரீ பி.சுதாங்கன் அவர்கள் சிறப்புரை ஆற்றி வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசுகளை வழங்கினார். தொடர்ந்து மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி ஸாஸ்திரிகள் அவர்களும் பரிசுகளை வழங்கினார்கள். போட்டிகளை சிறப்பாக நடத்தி பரிசுக்குரிய மாணாக்கர்களைத் தேர்ந்தெடுக்க நடுவர்களாக பணியாற்றிய பல்வேறு பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆசிரியைகளுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழா முடிவில் குழந்தைகளுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் சுமார் 1000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது. பகல் 2 மணிக்கு கட்டுரைபோட்டி நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் பின்னர் அந்தந்தப் பள்ளிகளில் அளிக்கப்பட்டது. விழாவில் கலந்துகொண்ட அனைத்து மாணாக்கர்களுக்கும் **“சான்றிதழ்”** வழங்கப்பட்டது.

விழாவினை திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் அவர்கள் தலைமையில் வேதபாரதி குழுவினர் ஏற்று நடத்தினார்கள்.

விழா படங்கள்.......................







தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**
வேளச்சேரி

# வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**

**City Union Bank, Velachery Branch**

**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

Sri Gurubhyo Nama:

# SRI CHANDRASHEKARA PRASADA GURUKULAM

Old No.7/147, New No.9/202, 7th Street, Om Shakthi Nagar,
Kovilambakkam, Chennai – 600 129.
(Near Kadambur Mariamman Apartment / Mobile : 98411 72098 /
http://scspgurukulam.com / Regd.No.R/Velacheri/Book – 4/141/2022
Donation Eligible for 80 G Incometax deduction
URN : ABETS3993DF20221 dated 16.09.2022

*ஆசீர்வாதம்!!*

*ஸ்ரீ பெரியவாளின் அருளாலும், உங்கள் ஆதரவாலும், ஸ்ரீ சந்திரசேகர் ப்ரஸாத குருகுலம் கடந்த நான்கு ஆண்டுகளாக 20 மாணவர்களுடன் பாரம்பரிய வேதக் கல்வி முறைமற்றும் ஆங்கில வழி படிப்புகளில் நம் குருகுலம் இயங்கி வருகிறது.*

*குருகுலத்திற்காக பிரத்யேகமாக* Whatsapp# *மற்றும்* Gpay 73053 52098 *உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அமாவாசை, துவாதசி, பிறந்தநாள், திருமண ஆண்டு, திருவிழாக்கள் போன்றபல சந்தர்ப்பங்களில் சமாராதனம் (அன்னதானம்) செய்ய வாய்ப்பு உள்ளது என்பதை நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.*

*உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு ஸ்ரீபெரியவாளின் ஆசிகள் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.*

*தர்மோ ரக்ஷதி ரக்ஷித:*

*கு. இகிருஷ்ணன் ராகவன் கனபாடிகள்.*

ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா



# ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும்

**நாராயணன்** **பகுதி 8**

## அத்தியாயம் – 4
## கோவிலின் அமைப்பு

*கணபதி ஸந்நிதானத்திற்கு எதிரில் ஒரு திறக்கப்படாத "நிலத்தடி அறை ஒன்று உள்ளது. இந்த அறையில் பண்டைய காலத்தில் இருப்பு பணம், தங்க மற்றும் வெள்ளி மறைத்து வைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்த அறையின் வாயில் ஒரு பெரிய கிராணைட் கல்லால் மூடப்பட்டுள்ளது. இதில் புராண* **"சியமந்தகம்"** *உட்பட அரிய மற்றும் விலையுயர்ந்த வைர கற்கள் இருப்பதாக பரவலாக நம்பப்படுகிறது. அது மட்டுமல்லாமல் அந்த பொக்கிஷங்களை எண்ணற்ற பாம்புகள் நெருக்கமாகப் பாதுகாக்கின்றன என்றும் புராணக்கதை கூறுகிறது.*

*ஸ்ரீ கோவில் என்றழைக்கப்படும் மூலஸ்தானத்திற்கு எதிரில் நான்கு தூண்களைக் கொண்ட ஒரு மண்டபம் உள்ளது. இதற்கு* **"நமஸ்கார மண்டபம்"** *என்று பெயர். இந்த தூண்கள் 100 கிலோ செம்பு மற்றும் 25 கிலோ தங்கத்தால் மூடப்பட்டுள்ளது.*

*மூலஸ்தானத்திற்கு வடகிழக்கே வருண பகவானால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புனித கிணறு உள்ளது. குருவும் வாயுவும் வருணனை பூஜித்த ஐதீகத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த கிணற்றில் வருணனை ஆவாஹனம் செய்துள்ளார்கள். பரிவார தேவதைகளுக்கு பூஜை நடப்பதுபோல் தினமும் இந்த கிணற்றுக்கு பூஜை நடக்கிறது. இந்த கிணற்றில்*

எந்நாளும் தீர்த்தம் குறைவதேயில்லை. இந்த புண்ய தீர்த்தத்திற்குள் எண்ணற்ற சாளக்கராம கற்கம் சிலைகளும் உள்ளன. இந்த நீர் மிகவும் சுவையாக இருக்கும். அந்த பகுதிக்கு அருகில் எங்கும் இவ்வளவு இனிப்பு நீர் கிடைக்காது என்று உள்ளூர் வாசிகள் கூறுகிறார்கள். இந்த கிணற்று நீர்தான் தினமும் பகவானின் அபிஷேகத்திற்கு மட்டுமே உபயோகப்படுத்தப்படுகிறது. மூலஸ்தான எந்த உபயோகத்திற்கும் வெளியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது கிடையாது. சில பக்தர்கள் இந்த கிணற்றின் உள் காணிக்கையாக பணத்தைப்போடுவார்கள்.

நாலம்பலத்திற்கு வடக்கில் ஒரு சிறிய வாசல் உள்ளது. பகவானை தரிசித்தபின் பக்தர்கள் இந்த வாசல் வழியாகத்தான் பிரகாரத்தை அடையவேண்டும். இந்த வாசல் வழியாக வெளியே நுழைந்தால் வடக்கு பிரகாரம் **“யானைப் பந்தல்”** அடையலாம். இந்த மண்டபத்தில்தான் தினமும் இரவு கிருஷ்ணாட்டம் நடைபெறும். இங்கு இருக்கும் ஒரு சிறிய மண்டபத்தில்தான் அபிஷேக தீர்த்தமும், பகவானுக்கு சார்த்திய எண்ணெயும், சந்தனமும் பக்தர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

கிழக்குப் பகுதியில் **“துலாபாரம்”** இடமும் கோவில் அலுவலகமும் உள்ளன. அவற்றின் பக்கத்தில் ஓர் உயரமான கூண்டில் பெரிய மணி ஒன்று தொங்கவிடப்பட்டிருக்கும். ஒவ்வொரு மணி நேரத்திற்கும் இந்த மணி, நேரத்தை அறிவிக்க அடிக்கப்படும்.

பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் **“கூத்தம்பலம்”** உள்ளது. இதன் உள்ளே அநேக சிற்பவேலைகள் அமைந்த சிலாரூபங்களும், சித்திரங்களும் உள்ளன. உற்சவ காலத்தில் இங்கு “சாக்கியார் கூத்து” நடத்துவார்கள்.

இதன் வடக்கில் தர்ம சாஸ்தா மேற்கு பார்த்தபடி வீற்றிருக்கிறார். அதைத் தொடர்ந்து மேற்கு மூலையில் ஒரு புத்தக ஸ்டால் உள்ளது. இங்குதான் கோவிலின் மேற்கு கோபுரமும் வாசலும் அமைந்துள்ளது. இதன் வழியாக வெளியே சென்றால் பிரசாத கவுண்டர்களை அடையலாம்.

கோவிலின் வடகிழக்கு மூலையில் உப தெய்வங்களுள் ஒன்றான பகவதிக்கு தனி சந்நிதி அமைந்துள்ளது. இந்த தேவிக்கு **"அரிகத்து பகவதி"** என்று பெயர். மதுரையை எரித்த கண்ணகி ஆவேசம் தணிந்த போது அவளுடைய ஒரு அம்சமாக இங்கே இருப்பதாக கூறப்படுகிறது. முதலில் இந்த தேவியை தரிசித்தபிறகுதான் குருவாயூரப்பனை தரிசிக்க வேண்டும் என்பார்கள்.

கோவிலின் வெளியே வந்தால் வடக்குப் பகுதியில் ஒரு பெரிய குளத்தைப் பார்க்கலாம். இந்த குளத்திற்கு **"ருத்ர குளம்"** அல்லது **"ருத்ர தீர்த்தம்"** என்று பெயர். முன்காலத்தில் "பிரதேதசுக்கள்" தவம் புரிந்த தடாகத்தின் ஒரு பகுதி இந்த குளம். முன் காலத்தில் இந்த குளம் இங்கிருந்து சில தூரத்தில் இருந்த "சாட்டுக்குளம்" (தற்போது மம்மியூர்) என்ற இடம்வரையிலும் பரந்திருந்ததாகவும், காலப்போக்கில் பல மாறுதல்கள் ஏற்பட்டு தற்போது இங்கு காணப்படுகிறது. பக்தர்கள் முதலில் இந்த குளத்தில் குளித்துவிட்டு ஈரத் துணியோடு பகவான் குருவாயூரப்பனை தரிசிக்கச் செல்வார்கள். குருவாயூர் உற்சவத்தின் பத்தாவது நாள் பகவானை இந்த குளத்தில்தான் நீராட்டுவார்கள். இதற்கு **"ஆராட்டு"** என்று பெயர்.

*(ஜனவரி 25 வேதபாரதி செய்திகள் இதழில் "குருவாயூர்" கட்டுரையை பார்க்கவும்)*

தொடரும்...

# வணங்குகிறோம்




பாரதத்தாயின் 130 கோடி மக்களின் காவலர்களாக தேசத்தின் பெருமையை பறைசாற்றி எதிரிகளை அழித்து நம்மை காத்து வரும் எல்லைப் பாதுகாப்பு ராணுவ வீரர்களை வணங்குகிறோம். அவர்கள் குடும்பங்கள் நலமுடன் வாழ வேதபாரதி ப்ரார்த்திக்கிறது. இன்னுயிர் துறந்த நம் சொந்தங்களுக்காக வருந்துகிறோம்.

## 14.04.2025 முதல் 31.05.2025 வரை சென்னை வேளச்சேரியில் நடைபெற்ற கோடைகால நீர், மோர் வழங்கும் நிகழ்வு

## வேதபாரதி செய்திகள்

## கோடைகால நீர் மோர் விநியோகம்





# முருகன் புகழ் போற்றிப் பாடுவோம்

தமிழ் என்றால் முருகன்,
உலகமெங்கும் வாழும் தமிழர்களுக்கு ஆறுபடை வீடுகளின் தரிசனம் என்பது வாழ்வின் முக்கிய குறிக்கோள்.

பக்தர்களின் காணிக்கை மூலம் பல ஆயிரம் கோடி வருமானம் வருகின்ற போதும் ஆறுபடை உட்பட பல ஆயிரம் கோயில்கள் கேட்பாரற்று, கவனிக்கப்படாமல் உள்ளது.

பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு எந்த அடிப்படை வசதியும், பாதுகாப்பும் இல்லை.பக்தர்கள் சொல்ல முடியாத துயரத்தை அனுபவிக்கிறார்கள் .

ஆலயத்தை நிர்வாகம் செய்யும் தமிழக அரசு கோயில் சொத்துக்களையும், புனிதமான மலைகளையும் பாதுகாக்க எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

நமது அனைத்து கோயில்களையும் உலகமே போற்றும் வகையில் பாதுகாத்து பராமரிக்கப்பட வேண்டும் என்பதே முருக பக்தர்களின் விருப்பமாகும்.

**நம்ம சாமி! நம்ம கோயில்!!**
**இவற்றைப் பாதுகாக்க!!!**

முருக பக்தர்களே! ஜுன் 22 ஞாயிறு அன்று
மதுரையில் சங்கமிப்போம்.

தொடர்புக்கு:

9786350450

அம்மா திடல்,
மதுரை

## பதகம் பாடுதல் நிகழ்ச்சி
## 18.04.2025, மயிலாடுதுறை



## பெண்மையைப்போற்றுவோம்
## 18.04.2025, ஊரப்பாக்கம்






## கோடி காயத்ரீ ஜப யக்ஞம்
## 19.04.2025, ஊரப்பாக்கம்








வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

# மௌனம்



"வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி'' என்று சொல்வது சாப்பாடு, பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதைக் குறிக்கிறது. ஆனால், நாம் அதற்கு நேர்மாறாகப் பண்ணுகிறோம். வாய்தான் ரொம்ப Over – worked! அளவுக்கு அதிகமாக ஓயாமல் ஏதாவது சாப்பாடு, நொறுக்குத் தீனி, பானம் என்று உள்ளே தள்ளிக்கொண்டே இருக்கிறோம். எப்போது பார்த்தாலும் வெட்டியாக ஏதாவது பேசிக் கொண்டே இருக்கிறோம்.

இந்த இரண்டையும் ரொம்பக் குறைத்துக் கொள்ள வேண்டும். "கண்டதைத் தின்று கெடுதலை வரவழைத்துக் கொள்ளாதே, ஸாத்விக ஆகாரம் மட்டும் அளவாகச் சாப்பிடு, அவ்வப்போது, அதுவும் கூட இல்லாமல் உபவாசம் இரு என்கிறது சாஸ்திரம், அதேபோல, "வாயில் வந்ததைப் பேசிக்கொண்டே போகாதே; அதனால் மற்றவர்களையும் கெடுக்காதே, பகவத் விஷயமாகப் பேசு, பாடு, பஜனை பண்ணு'' என்று சொல்லிவிட்டு, உபவாசத்தின்போது ஸாத்விக உணவுகூடச் சாப்பிடக்கூடாது என்று வைத்திருப்பது போலவே, "பகவானைப் பற்றிய பேச்சும் கீர்த்தனமும்கூட இல்லாமல் அவ்வப்போது வாயை மூடிக்கொண்டு மௌனமாக இரு" என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## நிலையற்ற வாழ்க்கை




சென்றமாத தொடர்ச்சி....

சிறிது தொலைவில் சில கொக்குகள் பறப்பதையும், நீரில் வளரும் சில தாவரங்கள் நன்கு செழித்து வளர்ந்திருப்பதையும் கண்ட அவன், அங்கே நீர்நிலை இருக்க வேண்டும் என ஊகித்துக் கொண்டான். நீரைக் கொண்டு வருமாறு யுதிஷ்டிரர் அவனை அவ்விடத்திற்கு அனுப்பி வைத்தார். தான் பார்த்த இடத்தை அடைந்த நகுலன், அங்கே ஒரு பெரிய ஏரி இருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தான். ஆவல் மிகுதியாலும், மிக்க சந்தோஷத்துடனும் நகுலன் சிறிது நீரை எடுத்துக் குடிக்கப் போகும் தருணத்தில், எங்கிருந்தோ ஓர் அசரீரி. தாகத்தைப் பொறுக்க முடியாமல் நகுலன், அசரீரியின் வாக்கை சட்டை செய்யாமல் நீரைக் குடித்து விட்டான். உடனே அவன், உயிர் பிரிந்து பிணமாகத் தரையில் சாய்ந்தான்.

பிறகு, நகுலனைத் தேடிக்கொண்டு சகாதேவன் ஏரியை நோக்கி வந்தான். அவனும் அசரீரியின் வாக்கைப் புறக்கணித்து விட்டு ஏரியின் நீரை அருந்தியதால் உயிரிழந்தான். அதன்பின், அடுத்தடுத்து வந்த அர்ச்சுனனும், பீமனும் நகுல சகதேவர்களைப் போலவே நடந்து கொண்டதால் அவர்களும் ஒருவர் பின் ஒருவராக மாண்டு போனார்கள். கடைசியில், தமது சகோதரர்களைத் தேடிக்கொண்ட யுதிஷ்டிரர் ஏரியை நாடிவந்தார்.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-9 வேதங்கள் வெளிப்பட்டவிதம் தொடர்ச்சி :*

உடல் வெறுமனே இருந்தாலும், மனம் சும்மா இராது. ஒரு நொடி இடைவெளிகூட இல்லாமல், இவ்வாறு நாம் ஏன் செயல் புரிந்து கொண்டிருக்கிறோம்? நம்மை நாமே உன்னிப்பாகக் கவனித்தால், காரணம் புலப்படும். நாம் மகிழ்ச்சியைத் தேடுகிறோம். சந்தோஷத்திற்காக நாம் நேராக நிமிர்ந்து உட்காருகிறோம். அமரும் நிலைப்பாடுகளையும் சந்தோஷத்திற்காக மாற்றுகிறோம். மகிழ்ச்சிக்காக உண்கிறோம்; மகிழ்ச்சி கருதி உபவாஸம் இருக்கிறோம். மகிழ்ச்சிக்காகத் திருமணம் செய்து கொள்கிறோம். மகிழ்ச்சிக்காக ப்ரஹ்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கிறோம். மற்றவர்களோடு சேர்ந்து இருப்பதில் மகிழ்வெய்துகிறோம். தனிமையிலும் மகிழ்ச்சி காண்கிறோம். இவ்வாறாக, நம்முடைய எல்லாச்செயல்களுக்கும் செயலின்மைக்கும் பொதுவான ஒரே குறிக்கோள் மகிழ்ச்சியாயிருத்தலே.

இருப்பினும், இக்குறிக்கோளைக் கருத்திற்கொண்டு நாம் செய்யும் செயல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாவது, தாபம் எனப்படும் துக்கத்தைத் தவிர்ப்பது, அதையும் மூன்றாகப் பிரிக்கலாம்.

தொடரும்...


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
WOPPER

# மூத்தோரே! கவனியுங்கள்!

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 4 பகுதி - 6

## அத்தியாயம் — 6

மூத்தோர்களுக்கு மிக முக்கியமாக கண்களுக்கும், மனதிற்கும் "சொந்த – பந்தங்கள்" எனும் வார்த்தை மிகுந்த ஆர்வத்தையும், ஆசையையும் அளிக்கும். காரணம், பிறந்தநாள் முதல் அந்த காலத்தில் வேலைக்குச் செல்லாத பெண்களுக்கு அவர்களைத் தாங்கும் சுவர்கள் உறவு-முறைகள் தான்.

பிறகு, வேலைக்கு அதுவும் அரசாங்க வேலைக்குச் சென்றபெண்கள் உறவு – முறைகளைப் பேணுவதில் சிக்கல் அதிகமாக இருக்கவில்லை. காரணம், காலை 10 மணிக்கு ஆபீஸ், 10 மணிக்கு பள்ளி, மாலை 5 மணிக்கு வீட்டிற்கு வந்துவிடலாம்.

அடுத்து, "இன்ஜினீயரிங்க்" என்று ஒன்று உள்ளே வர, காலை 5.30 மணிக்கே கல்லூரி, 7.30 மணிக்கு காலையில் பள்ளி என்று மாறத் துவங்கியது. படித்துவிட்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித்தவுடன் நம் இந்திய பெண்களின் வாழ்வில் எத்தனை மாற்றங்கள்!.

இன்று சொந்த – பந்தங்கள் என்பது கடந்தகால நினைவுகளாக மூத்தோருக்கு ஆகிவிட்டன. திருமணங்களுக்கு மட்டுமே செல்ல நேரமிருக்கும் மகன் (அ) மகள் குடும்பங்கள் கூடிவிட்டன. செல்ல இயலாத மூத்தோருக்கு மனக்கஷ்டம்.

அதனால் வந்தவுடன் பேரக்குழந்தைகளிடம், "யாரைப் பார்த்தே? அவரைப் பார்த்தியா, இவரைப் பார்த்தியா?" என்று ஆசையுடன் கேட்க, தோள்களைக்

குலுக்கி, உதட்டைப் பிதுக்கும் அவர்கள் அடுத்த நொடி, தன் மொபைலை நோண்டுவதைக் கண்டு மனம் கொதித்து சண்டைக்கு தயாராகயிருக்கும் மூத்தோர்களே ஒரே ஒரு வார்த்தை "வேண்டாம்"!

ஏனெனில், "அவர்கள் வெளியே போய் வந்தது உங்களுக்கு பொறாமை" என்று சண்டை முடியும். உங்களுக்கு புரிய வேண்டிய முக்கியமான உண்மை ஒன்று தான். சொந்த-பந்தம், உறவு-முறை என்பதெல்லாம் கடந்த காலம் நம் மீது வாசனை சந்தனமாக தெளித்துள்ள மிச்சங்கள்.

இன்று வெற்றி பெற்றவனைக் கொண்டாடும் உறவுகள், தோல்வி அடைந்தவனை தள்ளி வைக்கும். அன்று இந்த வித்தியாசங்கள் கிடையாதா? உண்டு. ஆனால், வெளியில் தெரியாது. "வெல்லம் இருக்கிற இடத்தில் தானே ஈ மொய்க்கும்" என்று சும்மாவா கூறினார்கள் பெரியோர்கள்!

அன்று உங்கள் இன்பத்திலும், துன்பத்திலும் பங்கேற்றவர்களுக்கு உங்களைப் போன்றேவயதாகிவிட்டது. அவர்களின் குழந்தைகளுக்கே 60 வயதாகிவிட்டது. இன்னும் உங்களிடம் எதிர்பார்ப்பு இருந்தால் அது தவறல்லவா?

இதை வேறுவிதமாக கையாள வேண்டும். "இப்போ முடியலை. அதனால நீங்க போயிட்டு வாங்கோ. முடிஞ்சா உங்க "ஸ்மார்ட் போன்"ல நம்ம சொந்த-பந்தங்களை வீடியோ எடுத்துண்டு வாங்கோ போறும். பார்த்து சந்தோஷப்படுவோம்" என்று உங்கள் 70வது வயதிலாவது உறவுச் சங்கிலிகளை உங்கள் மகன் (அ) மகளிடம் அளித்துவிட்டு ஒதுங்கினால் தான் மனதில் கோபம், ஆத்திரம், வெறுப்பு, அதீத பாசம் என்று அனைத்தையும் தூக்கி ஏறிய முடியும்.

ஆரோக்கியமான இடைவெளியுடன் பழக

அவர்கள் எப்பொழுது கற்றுக் கொள்வார்கள்? பேரக்குழந்தைகளுக்கு உறவுகளை பழக்கும் உரிமை அவர்களின் பெற்றோர்களுக்கு தான் உண்டு. சொந்தங்களில் யார் யார் எப்படி அவர்களிடம் எந்தளவிற்கு நெருங்க இயலும்? "வாட்ஸ் அப்" மூலமாக பல நாடுகளில் பறந்து இருக்கும் உறவுகளை ஒன்றிணைக்கும் காலம் இது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

மிக முக்கியமான விஷயம் மூத்தோர்களான நாம் எக்காரணம் கொண்டும், "அந்த பாட்டியை மருமகன் (அ) மருமகளை பெற்றவள் கண்டாலே என் பேத்திக்கு (அ) பேரனுக்கு பிடிக்காது" போன்ற"தத்துவ முத்துக்களை" முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

**"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த**
**இன்னா உலகம் புகல்". (அதிகாரம் – 25 குறள் – 243)**

"அருளோடு நெறிமுறைகொண்ட வாழ்வை வாழ்பவர்கள், அறியாமை நிறைந்த உலக விவகாரத் துன்பங்களில் ஈடுபட மாட்டார்கள்" என்கிறார் வள்ளுவர் பெருமான்.

தொடரும்...


## புதிய ஸ்லோக வகுப்புகள்

## கோரகஷ்ட நிவாரண ஸ்தோத்ரம்

**ஸ்ரீ ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் அருளியது.**

பூஜ்யஸ்ரீ நெரூர் ஸ்ரீ வித்யா ஸங்கர ஸரஸ்வதி
ஸ்வாமிகள் அருளாசியுடன் ஆரம்பம்
ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன், மதுரை
ஸ்ரீமதி. நீலா முரளிதரன், மதுரை

தொடர்புக்கு : **9443489129**

# இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

*தங்களுடன் பேசுவதே எனக்கு மிகவும் ஆறுதலாக இருக்கின்றது. கஷ்டம் ஏற்படும் போது நமது நலன் கருதி பேசுவர்களிடம் ஒரு ஈடுபாடு இருக்கும். தாங்கள் கணையாழி கொடுத்தது போல் எனக்கு என் தாய் பரிசாகக் கொடுத்த சூடாமணியை கொடுக்கிறேன் என்று கூறி ஹனுமனிடம் கொடுத்தாள். என்னைப் பார்த்தற்கு அடையாளம் என்றும் கூறினாள். ஹனுமனும் அதை பயபக்தியுடன் வாங்கிக் கொண்டான்.*

*ஒரு தூதன் தனது தலைவன் சொன்ன காரியத்தை மட்டும் திறம்பட செய்தால் அவன் சாதாரண தூதன். அதற்கு மேல் தான் வந்த காரியத்திற்கு வலுவேர்க்கும் வகையில் செயல்படுவன் உத்தம தூதன்.*

*இராவணனின் பலம், பலஹீனம், இலங்கை நகரின் அமைப்பு, அந்த ஊர் மக்களின் மனோபாவத்தை துல்லியமாக அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று சிந்தித்தான் ஹனுமன்.*

*வெகு தூரம் பயணம் செய்த களைப்பு, பசி, சீதையின் அனுமதி பெற்று அங்குள்ள காய், கனிகளைச் சாப்பிட ஆரம்பித்தான், அப்போது இரவு நேரம். இரவு நேரங்களில் மரம், செடிகளிலிருந்து காய், பழம், பூக்கள் பறிக்கக் கூடாது என்பது நியதி. அதை உறுதியாகக் கடைப்பிடிக்க மரத்தை உலுக்கி கீழே காய், கனிகளைச் சாப்பிட ஆரம்பித்தான். ஹனுமனின் தேக பலத்தால் சில மரங்கள் உலுக்கும் போது அப்படியே கீழே சாய்ந்தன. காவலர்கள் சிலர் இதை எதிர்த்து ஹனுமனுடன் சண்டையில் இறங்கினர். அனைவரும் இறந்தனர். இந்தச் செய்தி இராவணன் காதுக்கு எட்டி கடும் கோபத்தை அடைந்தான். பிறகு திறமையான பல வீரர்களை ஹனுமனை எதிர்க்க அனுப்பினான்.*

அவர்களும் மரணம் அடைந்தனர். தனது மகன் அக்ஷனை அனுப்பினான். நீண்ட நேரம் இருவருக்கும் இடையே கடும் போர் நடந்தது. இறுதியில் அக்ஷனும் மடிந்தான். இதைக் கண்டு இராவணன் நிலை குலைந்தான். தனது மகன் மேகநாதனை அனுப்பினான். இருவருக்கும் இடையே கடும் சண்டை. இறுதியில் இந்திரஜித் ப்ரும்மாஸ்திரத்தை ஹனுமன் மீது ஏவினான். ஹனுமன் அதற்குக் கட்டுப்பட்டு இராவணனை சந்திக்கும் வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டான்.

ஹனுமனைப் பார்த்ததும் இராவணனின் கோபம் தலைக்கேறியது. இராவணனின் தோற்றம், ஹனுமனை பிரமிக்க வைத்தது. மேலும் இராவணன் தான் பெற்ற அபரிமித சக்திகளை தர்ம காரியங்களுக்கு மட்டும் பயன்படுத்தியிருந்தால் இவனே மூன்று உலகிலும் தலைவன் என ஹனுமன் எண்ணினான். இராமனிடம் தர்மம், புகழ் இரண்டும் இருந்தது. இராவணனிடம் புகழ் மட்டும் இருந்தது. அதனால் செருக்கடைந்து தனது அழிவிற்கு தானே காரணம் ஆனான்.

ஹனுமனை விசாரிக்க ஆரம்பித்தனர். தன்னை ஹனுமன் சுக்ரீவனின் தூதன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். நான் சாதாரண வானரன். அடுத்தவர் மனைவியை அபகரிப்பது தவறு. தாங்கள் இராமன் இல்லாத நேரத்தில் வஞ்சமாக சீதையை அபகரித்து வந்திருக்கிறீர்கள் நன்கு தவம் செய்து பிரம்மனிடமிருந்து பல வரங்கள் பெற்றதாங்கள் இப்படி இழிவான செயலைச் செய்யலாமா? உனது செயலால் உனது குலமே அழியப் போகிறது. இராமரின் கோபத்திற்கு ஆளாகாதே. சீதையை கௌரவமாக இராமனிடம் ஒப்படைத்துவிடு. கால நாகம் போல் சீதையை உனது அருகில் வைத்திருக்கிறாய். நீண்ட பெருமையோடு வாழும் வாழ்க்கையை பெறவரங்கள் பெற்றிருக்கிறாய். அந்த வாய்ப்பை இழக்காதே,

தொடர்ந்து தீய செயல்கள் செய்பவனை அவனது தீய செயல்களே பின் தொடர்ந்து வரும். அதே மனிதன் நல்ல செயல்களை செய்ய ஆரம்பித்துவிட்டால் அவனது தீமை மன்னிக்கப்படும். என்று அறிவுறுத்தினான் ஹனுமன். இராமருக்கு தீங்கு செய்தால் இந்திரன் கூட தப்ப முடியாது. நீ எம்மாத்திரம். நான் சத்தியம் பேசுகிறேன். காது கொடுத்துக் கேள். உன்னுடைய பக்திக்கு மெச்சி சிவன் மூலம் கிடைத்த வரங்கள் கூட குறி தவறலாம். ஆனால் வேத நெறியிலிருந்து விலகாத இராமரின் அம்பு குறி தவறாது.

அப்போது இராவணன், தான் முன்பு இகழ்ந்து பேசிய நந்திதான், இப்படி ஹனுமன் உருவில் வந்து பேசுகிறதோ அல்லது பாணாசுரன் தான் இப்படி வந்துள்ளானா என நினைத்தான்.

மருத்துவர், குரு, மந்திரி போன்றவர்கள் தங்களை நாடி வந்தவர்களின் நன்மைக்காகச் செயல்பட வேண்டும். நாடி வந்தவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட்டால் அவர்கள் அழிந்து போவார்கள். தங்களது தொழிலுக்கு விரோதமாகச் செயல்பட்டதால் அவர்களை நாடி வந்தவர்கள் விரைவில் அழிந்து போவார்கள். அரசனைக் குஷிப்படுத்த அதர்ம, வார்த்தைகளை மந்திரி பேசினால் அந்த அரசன் அழிவது உறுதி தன்னை நாடி வந்தவர்களுக்கு துரோகம் இழைக்காமல் அந்த மூவரும் செயல்பட வேண்டும்.

இராவணன் அவையில் உள்ள அனைவரும் தேவைக்கு அதிகமாகவும், தவறாகவும், புகழ்ந்து அவனை தவறாக வழிநடத்தினார்கள். அவர்களில் இராவணனின் தம்பி விபீஷணன் மட்டும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் உண்மை, நல்லதை எடுத்துக் கூறஆரம்பித்தான். ஹனுமனது அறிவுரையை விரும்பாத ராவணன் அவனுக்கு மரண தண்டனை கொடுக்க ஆணையிட்டான். தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.

24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**

# வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரை

## மதுரா விருந்தாவனில் ஸ்ரீ ராதாகிருஷ்ணமயம் – 5

**(Dr. ஷ்யாமா ஸ்வாமிநாதன்)**

*ராதே கிருஷ்ணா!* *எல்லாம் இறைசெயல் !*



*விருந்தாவனத்தின் அதி முக்கிய பிரேம்மந்திரை இரவு – பகல் இரு வேளைகளிலும் ஆசை தீர தரிசித்து மனம் நிறைவுற்றோம். அடுத்து ஷாந்திதாம் விடுதி வளாகத்தில் உள்ள* **ப்ரியகாந்த்ஜுமந்திர்** *எனப்படும் தாமரைக் கோவிலை தரிசிக்க அதன் வளாகத்திற்கு வந்துவிட்டோம். கண் எதிரே, வானாளாவிய அளவில் வெண்பளிங்குத் தாமரைமலர் வடிவ கட்டிடம் தெரிந்தது. அதன் மத்தியில், பூரி ஜெகந்நாதர் ஆலயம் போல் உயர்ந்த கோபுரம். உள்ளே, வெளியே, சுற்றிலும் ஸ்ரீராதாகிருஷ்ண மயமான கலைநயம் மிக்க பிரும்மாண்டம்! பார்த்தும், ரசித்தும், பிரமித்தும்மாளவில்லை.*

*ஸ்ரீராதாகிருஷ்ணருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள இவ்வாலயம், 2009ம் ஆண்டு விஸ்வஷாந்தி அறக்கட்டளையின் தலைவர்* **ஸ்ரீ தேவகிநந்தன்டாகூர்** *அவர்களால் உருவாக்கப்பட்டது. இந்த அற்புத ஆலயம் நிறைவடைவதற்கு சுமார் ஏழு ஆண்டுகள் ஆகியுள்ளன. இதன் அடித்தளத்தில உண்மையாகவே, சில தாமரை மலர்களை உள்வைத்துக் கட்டியுள்ளார்களாம் 2016ம்*

ஆண்டு பொதுமக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ள இக்கோவிலில் ஸ்ரீ ராதா - கிருஷ்ணனின் அழகிய திருவுருவங்கள், முறையே **பிரியாஜி** மற்றும் **காந்த்ஜு** உருவில் உள்ளனர். அதனால் இந்தக் கோவிலை ப்ரியகாந்த்ஜு மந்திர் என்றும் அழைக்கிறார்கள்.

மலர்ந்த தாமரை மலரின் வடிவத்தில் கட்டப்பட்டுள்ள இந்த கோவில் சுமார் 125 அடி உயரம் கொண்டது. கோயிலின் இருபுறமும் நீரூற்றுகளுடன், ஏரிகள் உள்ளன. கோவிலின் நான்கு மூலைகளிலும் **விநாயகர், அனுமன், சிவன்** மற்றும் **நிம்பர்கபகவான்** கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. ராஜஸ்தானின் மக்ரானாமார்பிள் கற்கள் கட்டுமானத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கண்களைப் பறிக்கும் வெண்பளிங்கு ஆலயத்தின் மூல சன்னதிக்கு, நாங்கள் மக்கள் வெள்ளத்தில் வந்து நின்றபோது, ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் ஆடை அலங்கார அழகில் சில நொடிகள் ஸ்தம்பித்து நின்றுவிட்டோம். நெஞ்சம் நிறைந்த கொள்ளை அழகு! திடீரென்று உடன் வந்த சகி சரஸ்வதி, ராதாகிருஷ்ணரின் கழுத்தில் தொங்கும் மாலையைப்பாருங்கள் என்று பரபரப்பாக சொன்னதும் என் பார்வை, அவர்களின் முகலாவணியத்திலிருந்து கீழே இறங்கியது. அதுவரை, நான் அவர்களின் முகம் பார்த்து, “உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று எனக்குத் தெரியவில்லையே” என்று மௌனமொழி பேசிக்கொண்டிருந்தேன்.

“அட, நீங்கள் இன்னும் எங்கே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் கழுத்தில் தொங்கும் மாலையில் என்ன எழுதியிருக்கிறது பாருங்கள். உங்களுக்குத்தான் இந்தி படிக்கத்தெரியுமே” என்றார். அப்போதுதான் கவனித்தேன். என்னால் என்

கண்களை நம்பத்தான் முடியவில்லை. ஸ்ரீ கிருஷ்ணரின் கழுத்து முத்துமாலையின் முகப்பில் **"ஷ்யாமா"** என்றும், ஸ்ரீ ராதையின் கழுத்து முத்துமாலையின் முகப்பில் **"ஷ்யாம்"** என்றும் இந்தியில் எழுதப்பட்டிருந்தது. ஸ்ரீ கிருஷ்ணஜென்ம மாதமும் நட்சத்திரமுமான மார்கழி – ரோகிணியில் நான் பிறந்ததால், எனக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவானின் பெயரைத்தான் வைத்திருக்கிறார்கள். அவ்வாறே அழைத்துக்கொண்டும் இருக்கிறார்கள். குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு இறைவன் பெயரையும் முன்னோர்களின் பெயரையும் வைக்கும் மகத்துவம் எனக்கு அந்தத் தருணத்தில் புரிந்தது. இவ்வாறு தினம் ஸ்ரீ கிருஷ்ணரும், ஸ்ரீராதையும் அணிந்திருக்கும் மாலையில், அவர்கள் சம்மந்தப்பட்ட பெயர்கள் இருக்குமாம். மற்றொரு நாள், நாங்கள் தரிசித்தபோது ஸ்ரீ கிருஷ்ணரின் கழுத்தில், ஸ்ரீ ராதையின் பெயரான **"ப்ரிய"**வும், ஸ்ரீ ராதையின் கழுத்தில், கிருஷ்ணரின் பெயரான **"காந்த்"** ம்டாலரராகக் காட்சியளித்தது. என் பெயரை, ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் கழுத்தில் அசைந்தாடும் மாலையில் பார்த்ததும், அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. வெண்பளிங்கு ஆலயத்தின் சுற்றுச்சுவர்களில் வண்ண ஓவியங்களாக சித்தரிக்கப்பட்டிருந்த ஸ்ரீ ராதாகிருஷ்ண லீலைகளை ரசித்தபடியே சுற்றிவிட்டு வெளியே வந்தோம்.

அடுத்து, விருந்தாவனில் உள்ள இஸ்கான் ஆலயத்திற்குச்சென்று வந்துவிடலாம் என்று முடிவு செய்து ஈ-ரிக்ஷாவில் ஏறிக்கொண்டு பயணித்தோம். சுமார் 4 கி.மீ. பயணம். முதலிலேயே ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். நாம் அநேகமாக பல இஸ்கான் ஆலயங்களைப் பார்த்திருப்போம். அதுபோலத்தான் இதுவும் இருக்கப்போகிறது என்று

மட்டும் நினைத்து தவிர்த்துவிடாதீர்கள். இந்த ஸ்ரீ ராதா - கிருஷ்ணஜென்ம பூமியில் உருவாக்கப்பட்டுள்ள இந்த இஸ்கான் ஆலயத்தின் கலையழகினையும் பலதரப்பட்ட மக்களின் உள்ளம் உருக்கும் பக்தியையும் நேரில் அனுபவித்துத்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆலயத்தின்வாயிலில் வாகனம் நின்றதுமே, நம் பிரமிப்பு ஆரம்பமாகிவிடுகிறது. நுழைவாயிலைவிட கலைநயமிக்க உள்கட்டமைப்புக்கள் அதிஅற்புதம். இஸ்கான் என்றாலே பிரும்மாண்டம் தான். ஸ்ரீராதா கிருஷ்ணருடன் பலராமரும் சேர்ந்து கொண்டுவிட்டார். ஆமாம் இதனை **ஸ்ரீ கிருஷ்ண – பல்ராம்மந்திர்** என்று தான் அழைக்கிறார்கள். மத்திய மண்டபத்தில் இவர்கள் இருவரும்தான் காட்சி தருகிறார்கள். நம் வலதுகை பக்க மண்டபத்தில், ஸ்ரீ ராதாகிருஷ்ணர் ஸ்ரீ ராதா – ஷ்யாம் சுந்தராக, ஸ்ரீராதாவின் ஆத்ம சகிகளான ஸ்ரீ லலிதா மற்றும் ஸ்ரீ விஷாகாவுடன் தரிசனம் தருகிறார்கள். இடதுபக்க மண்டபத்தில் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவும் ஸ்ரீ நித்யானந்தரும் காட்சி தருகிறார்கள். இவர்கள் இருவரும் ஸ்ரீ கிருஷ்ணராகவும் ஸ்ரீ பலராமராகவும் கருதப்படுகிறார்கள்.

கூட்டம் நெறித்துக்கொண்டிருந்தது, ஆங்காங்கே விதவிதமான பக்தர்கள் கூட்டம் அமர்ந்து ஸ்ரீ ராதாகிருஷ்ண பஜன் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு கூட்டம் முற்றிலும் அயல்நாட்டினர். மையமண்டபத்திற்கு எதிரிலே, சில படிகள் இறங்கினால் பிரும்மாண்டமான சதுர வடிவ, பளிங்கு கற்கள் பதிக்கப்பட்ட முற்றம் போன்ற அமைப்பு உள்ளது. அதன் நான்கு பக்கமும், அமர்ந்து கொண்டாட்டங்களை ரசிக்க வசதியாக படிகள்

அமைக்கப்பட்டுள்ளன. முற்றத்தில் நம் தேச ஆண்களும் பெண்களும், பிறநாட்டு இஸ்கான்பக்தர்களும் **(அனைவரும் கச்சம் வைத்த வேஷ்டி அணிந்து, சிகை (குடுமி) வைத்துக்கொண்டு நெற்றியில் கோபி சந்தனம் தரித்து தெய்வீகமாக இருந்தார்கள்)** ஆடிப்பாடிக் கொண்டு மெய்மறந்த கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டிருந்தார்கள். மைய்ய மண்டபத்தில் நான் ஸ்ரீ ராதாஷ்யாம் சுந்தரரை தரிசித்துக்கொண்டிருக்கும் போது கவனித்தேன்.



மண்டபத்தின் மீது ஏறி நின்றுகொண்டு வீடியோ எடுத்துக் கொண்டிருந்த அயல் நாட்டவர் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது. அதை அவரால் துடைக்கக் கூட முடியவில்லை. அவர் தன் தொழிலை செய்துகொண்டே ஸ்ரீ ராதாகிருஷ்ணருடன் மௌன சம்பாஷணையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இப்படிப் பலர் இங்கே உணர்ச்சிவசப் பட்டிருந்தார்கள். பிரதான மூன்று தெய்வங்களை தரிசித்து வலது புறமாக பார்த்துக்கொண்டே நடந்தால், ஸ்ரீ ராதாகிருஷ்ண லீலைகள் அனைத்தும் அழகிய சித்திரங்களாக நம்முடன் பேசுவது போலவே இருந்தன. (இந்த தெய்வங்களையும் சித்திரங்களையும் கூகிள் தேடுதலில் virundhavaniskcon என்று டைப் செய்து Wikipedia வில் பார்த்து ரசியுங்கள்) என்னுடன் வந்தவர்கள் ஷாப்பிங் போனார்கள். எல்லாம்

நன்மைக்கே என்று நான் மீண்டும் ஆலயத்திற்குள் சென்று, முற்றத்துப்படிகளில் அமர்ந்து, ஆசைதீர, ஸ்ரீ ராதா-ஷ்யாம் சுந்தரை தரிசித்துக்கொண்டே, மகாமந்திரஜபம் செய்துகொண்டும் இருந்தேன். சிலநொடிகள் கண்களை மூடியிருந்தேன். **“மாதாஜி, பிரசாத்லேலிஜியே’’** என்று ஒரு குரல் கேட்க, கண்களைத்திறந்தால், என் முன்னால், சிவப்பு வஸ்திரம் அணிந்து சர்வ அலங்காரங்களுடன், மங்களகரமாய் ஒரு வட இந்தியப் பெண், இடுப்பில் கிருஷ்ணர் வேஷமிட்ட ஒரு அழகிய குழந்தையை வைத்துக் கொண்டு நின்றிருந்தாள். சாக்ஷாத் சந்தானலக்ஷ்மியே என் முன் நிற்பது போல் உணர்ந்தேன். அந்தக் குழந்தையின் கையில் ஒரு பால்கோவா துண்டு. **“மாதாஜி கோ பிரசாத்தேதோகிஷோர்”** என்றாள். அதுவும் மிக அழகாக சிரித்துக் கொண்டே எனக்குக்கொடுத்தது. கைகூப்பி வணங்கி நன்றி சொல்லி, அந்தக் குட்டிக் கிருஷ்ணனை ஸ்பரிசித்து முத்தமிட்டேன். இந்தக் கிருஷ்ணானுபாவத்தை எனக்குள் அனுபவித்துக் கொண்டே, மதிய உணவுக்குத் தங்கும் விடுதிக்கு வந்துவிட்டோம். மதியம் கிருஷ்ணஜென்ம பூமியான மதுராவில், அவர் அவதரித்த, மன்னன் கம்சனின் சிறைக்குச் சென்று ஸ்ரீ கிருஷ்ண குழந்தையை தரிசிக்க வேண்டும். காத்திருங்கள்...

ராதே ராதே!

விருஜ்பூமியில் பயணம் தொடரும்...

ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:
**வேதபாரதி**
**யோகா வகுப்புகள்** (30 நிமிடங்கள்)
**வாரம் 2 நாட்கள் by Online**
செவ்வாய், வியாழன் – காலை 6.00 மணி
சனி, ஞாயிறு – காலை 6.00 மணி
ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**
திருச்சி
யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்
தொடர்புக்கு :
**9443495950 / 9443453053**


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# சிவராத்திரி

## சிவாலய ஓட்டம் நடைபெறும் சிறப்புமிக்க பனிரெண்டு சிவாலயங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

## திற்பரப்பு ஸ்ரீ மகாதேவர் திருக்கோவில்

*திருவட்டாறு – களியல் சாலையில் உள்ளது. திற்பரப்பு, கோதையாற்றின் கரையில் உள்ளது. பேச்சிப்பாறை அணையிலிருந்து 13 கி.மீ. ஓடிவந்து இங்கு 15 மீட்டர் உயரத்திலிருந்து அருவி வீழ்கிறது. அருவிக்குத் தெற்கே ஆலயம் உள்ளது. ஸ்ரீவிசாலம் என்னும் சமஸ்கிருத சொல்லிற்கு திருப்பரப்பு என்பது பொருள். வழக்கில் திற்பரப்பாகியது, மனதிற்கு ரம்மியம் தரும் தலமிது.*

*தக்ஷனின் யாகத்தை அழித்த சிவன் தனது சினம் தணிந்திடத்தியானம் செய்த இடமே இக்கோவிலாகும். யாகத்தை அழிக்கச்சிவன் அனுப்பிய ருத்ரகாளியே குகைக்குள் கோயில் கொண்டுள்ளாள்.*

*தக்ஷனின் யாகத்தை அழித்து ஆவேசத்துடன் இருக்கும் வீரபத்திரர், அமைதியடைய வேண்டி நதியை நோக்கி அமர்ந்து தியானம் செய்கிறார்.*

*இக்கோவிலில் வீரபத்திரர் லிங்கவடிவில் உள்ளார். ஜடாதரர், மகாதேவர் என்றும் அழைக்கப்படுகிறார். மேற்கு நோக்கிய சந்நிதி, நந்தி மூலவர் எதிரே அமராமல் சற்று விலகியுள்ளார்.*

*தெற்கிலிருந்து வடக்குநோக்கிப் பாயும் நதியைப்பார்க்க, மேற்கு நோக்கியமர்ந்து தியானம் செய்கிறார். நதியை மறைக்காமலிருக்க நந்தி சற்றுவிலகி இருக்கிறார். இக்கோவில் 2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. நான்குபுறமும் 4.50 மீ கருங்கல் மதிலால் சூழப்பெற்றது. நான்குபுறமும் வாயில்கள் உண்டு. மேற்கு வாயிலில் மணிமண்டபம் உள்ளது.*

கிழக்கு, மேற்கு, தெற்கு வாயில்கள் மூன்றும் வடக்குவாயில்கள் 2ம் ஆக 5 வாயில்கள் உள்ளன. யானைக்கதவுகளுடன் பிரம்மாண்ட வாயில்கள்.

மேற்கு பிரகாரத்தில் 16 மீ உயரமுள்ள செப்புத்தகடு போர்த்திய கொடிமரம் உள்ளது. தென் மேற்கில் சிறிய சாஸ்தா சன்னதி உள்ளது. பூரணை புஷ்கலையுடன் ஸ்ரீ சாஸ்தா சுகாசனத்தில் உள்ளார். மேலும் ஸ்ரீகிருஷ்ணர், முருகன் சந்நிதிகளும், மணமேடையும் உள்ளன. கிருஷ்ணர் கையில் வெண்ணெயுடன் நின்றகோலத்தில் உள்ளார்.

கிழக்கு வெளிப்பிரகாரத்தில் 8 தூண்மண்டபம் உள்ளது. 12 தூண்கள் கொண்ட உட்பிரகாரச் சுற்று மண்டபம் உள்ளது. ஒடுக்குப்புரை, மடைப்பள்ளி, ஆகியவையும் உள்ளன.

மேற்கு வெளிப்பிரகாரத்தில் கிழக்குநோக்கு சுரதேவர் சன்னதி உள்ளது. முன் மண்டபம் 20 தூண்கள் கொண்டது. வழிப்பாதையில் பலிபீடமும் விளக்கும் உள்ளன. தென்புறத்திண்ணையில் கிழக்கு நோக்கிப் பார்வதி சன்னதி உள்ளது. வடக்குத் திண்ணையில் விநாயகர் சன்னதி உள்ளது. விளக்கு மண்டபம் செல்லத் திட்டி வாயிலும் உள்ளது. வாத்திய மண்டபத்தில் பல்வேறு சிற்பங்கள் உள்ளன. அதையடுத்து 16 தூண்கள் பிரமாண்ட பூஜா மண்டபமும் உள்ளது. இதன்மேற்கூரையில் நவக்கிரஹங்கள் உள்ளன.

தெற்குப் பிரகாரத்தில் பத்ரகாளியம்மன் கோவிலும் உள்ளது. பூஜாமண்டபத்தின் மேல்பகுதியில் அஷ்டதிக்பாலகர்கள் உள்ளனர்.

தொடரும்...

**கோடிகாயத்ரீ ஜப யக்ஞம் - 2025 ஊரப்பாக்கம்**

*சென்றமாத தொடர்ச்சி...*

*18.04.2025 மாலை 4.00 மணி முதல் 19.04.2025 தேதி நடந்த கோடி காயத்ரீ ஜப ஹோமத்திற்குண்டான பூர்வாங்க பணிகள் துவங்கியது. கடந்த 2 வருடங்களாக ஊரப்பாக்கத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை ஸகஸ்ர காயத்ரீயும், ப்ரம்மச்சாரிகள் சமிதாதானமும் செய்துவந்தார்கள். அதன் நிறைவாக காயத்ரீ ஜப யக்ஞம் நடைபெறுவதால் நம் வேதபாரதி உறுப்பினர்கள் தன்னார்வலர்கள் மிகுந்த உற்சாகமாக முன்ஏற்பாடு பணியில் பங்கு பெற்றார்கள். விழா நடைபெறும் பள்ளிக்கு பார்வதி பரமேஸ்வரர் உற்சவ பெருமாள் எழுந்தருளச் செய்தல், கடஸ்தாபனம், தோரணம் கட்டுதல், குண்டம் கட்ட செங்கல் சாணம் போட்டு மெழுகுதல், 16 குண்டங்கள் அமைத்தல், கோலம் போடுதல், திரவியங்கள் சேர்த்தல் போன்ற பணிகள் குழு அமைத்துக்கொண்டு வெல்லூர் ப்ரம்மஸ்ரீ கணேசவாத்தியார் ஆணைக்கு இணங்க மிக நேர்த்தியாக ஏற்பாடுகள் செய்தார்கள்.*

*18.04.2025 இரவு சிற்றுண்டி முடிந்து ஓய்வுக்குப்பின் 19ம் தேதி காலை 5.00 மணிக்கு ஊரப்பாக்கம் சுப்பிரமணிய ஸாஸ்திரிகள் ஏற்பாட்டில் கோ பூஜை சிறப்பாக நடைபெற்றது. காலை ப்ரும்மஸ்ரீ ராகவ கனபாடிகள் தங்கள் சிஷ்யர்களுடன் வந்திருந்து கோடி காயத்ரீ ஜப யக்ஞம் சிறப்புர பங்குபெற்றார்கள். அஷ்ட திரவியங்களுடன் ப்ரதம ஆச்சார்யர்களுடன் காலை 8.00 மணிக்கு சுமங்கலிப்பெண்கள் அக்னிமுகம் செய்துவைக்க ஒரு ஹோமகுண்டத்திற்கு 8 பேர் அமர்ந்து ஹோமம் ஆரம்பிக்கப்பட்டது.*

*ஸ்ரீ கணேச வாத்தியார் வழிகாட்டினார்கள்.*

திருச்சி எல்.ஐ.சி. ஸ்ரீ நந்தகுமார் 1008 ஆவர்த்திகள் எடுத்துக்கொடுத்தார்கள். ஸ்ரீ வெல்லூர் கணேச வாத்தியார் அவர்களுடன் வந்திருந்த வாத்தியார்கள் தங்களை ஹோம குண்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு ஹோமம் செய்பவர்களுக்கு உறுதுணையாக சொல்லிக் கொடுத்தார்கள். 10.50 மணிக்கு ஹோமம் நிறைவு பெற்றது. எல்லோருக்கும் பானகமும், நீர் மோரும் நெய்வேதனம் செய்து வழங்கப்பட்டது.

வேதபாரதியின் மீது அளவில்லா அன்பு கொண்டு ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். ஹோமம் செய்த ரித்வித்துக்களுக்கு ப்ராமண போஜனம், தீர்த்தம் வழங்கல், புக்ததட்சணை வேதொக்த ஆசீர்வாதங்களுடன் நடைபெற்றது. வந்தவர்களுக்கு ப்ரசாதங்கள் வழங்கி நல்வாழ்த்துக்களும் வழங்கினார்கள்.

19.04.2025 அன்று மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை வேதபாரதி அமைப்பின் எல்லா ஊர்களிலிருந்தும் வந்திருந்த நிர்வாகிக்களுக்கான அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ க்ருஷ்ண ஜந்நாதன்ஜி, ஸ்ரீ சந்திரசேகர் ஜி கலந்துகொண்டு சிறப்பித்தனர். முதல் சுற்றில் குத்தாலம் ஸ்ரீமதி ஜானகி மாமி தனது பகுதியில் நடைபெறும் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்கள். வேதவகுப்பு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ ப்ரசாத், பெண்குழந்தைகள் யுவஸ்ரீ பொறுப்பாளர் செல்வி சுபஸ்ரீ தங்களது பயண அனுபவங்களை பகிர்ந்தனர். சாயம் சந்யாவிற்கு பிறகு வேதவகுப்பு பொறுப்பாளர் ஸ்ரீ மகாலிங்கம், திருவாரூர் ஸ்ரீ சங்கர், திருநெல்வேலி ஸ்ரீ மணி வாத்யார் தங்களது கருத்துக்களையும், செயல்பாடுகளையும் எடுத்துரைத்தார்கள்.

தொடரும்.....

வைத்தியநாத ஸ்வாமி துணை

# மாத்ருபக்தி ஸ்ராத்த ஸ்தலா பள்ளிக்கரணை

ஜீவதோர் வாக்கிய கர்ணாத்
ப்ரத்யப்தம் பூரி போஜானாத்
கயாயாம் பிண்ட தானேஸ்ச
திரிபி : புத்தரஸ்ய புத்ரதா


அனைவருக்கும் நமஸ்காரம் / ஆசீர்வாதம் ஸ்ரத்தையாக
செய்யும் காரியங்கள் காரியசித்தியையும் நல்ல
மங்களத்தையும் கொடுக்கும்.
பள்ளிக்கரணையில் அற்புதமான ஓர் ஸ்தலம்
நமது முன்னோர்களுக்கான ச்ரார்தம் செய்துகொள்ள
தங்கள் வாத்தியாரை வைத்துக் கொண்டு
எங்கள் இடத்தில் செய்து கொள்ளலாம்.
வாத்தியார் இல்லாத பட்சத்தில் அதுவும் ஏற்பாடு
செய்து தரப்படும். சாஸ்திரோக்தமாய் செய்து தரப்படும்.
அனைத்து வசதிகள் உள்ளன என்பதை
வேதமாதா ஆசீர்வாதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!!!

**V.கணேஷ் வாத்தியார்**
எண்.18, பரசுராம் நகர் குறுக்கு தெரு, பள்ளிக்கரணை,
சென்னை - 600100.
**செல் : 90942 57006 / 73582 11982**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்


பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple·seamless·secure
IDRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

Posted at Egmore, RMS, Patrika Channel, Chennai - 8.
RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted between 1 - 7th April 2025

AURO MIRA MEDI AIDS
House of Home Healthcare Products

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier

#174, 26th East Street, Kamaraj Nagar,
Tiruvanmiyur, Chennai - 600 041.
9382159199 | auromiramediaids@gmail.com
www.auromiramediaids.in

To

____________________

If not delivered please return to
VEDABHARATHI
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.